முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

**EA.129/2025 in EP.104/2013 in OS.122/1997**

The Oaths Act 1969(Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 21.07.2026 நாளாகிய இன்று முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி Selvi.S.Padmavathi,M.L., அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 21.07.2026 | சாட்சி | ம.சா.1 |
| பெயர். | ராதாகிருஷ்ணன் | வயது.. | 55 |
| தந்தை பெயர். | கோவிந்தசாமி | ஊர்.. | சிதம்பரம் |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை ..**

1. நான் கதவு எண்.12/1, புதிய கதவு எண்.23 இல், காரைக்காட்டு சொக்கலிங்கம் தெருவில் வசிக்கிறேன். வழக்கு சொத்தில் தான் நான் குடியிருக்கிறேன். வீட்டு வரி கட்டி வருகிறேனா என்றால் கூரை வீட்டிற்கு வரி இல்லை என்று அரசாங்கத்தில் கூறிவிட்டார்கள். ஆதார் கார்டு 2008 -இல் அரசாங்கத்தால் அறிவிக்கும்போது பெற்றேன். ஆதார் அட்டையில் எப்போது வழங்கப்பட்டது என்ற விபரம் இருக்கிறதா என்றால் இருக்கிறது. வாக்காளர் அடையாள அட்டையில் என்ன முகவரி கொடுத்துள்ளேன் என்றால் சின்ன எழுத்தில் உள்ளதால் தெரியவில்லை. வாக்காளர் அடையாள அட்டை 1995 -இல் வாங்கினேன். வாக்காளர் அடையாள அட்டையில். 9 என்பது வார்டு எண் ஆகும், காரைக்காட்டு சொக்கலிங்கம் தெரு என்று கூறிப்பிடப்பட்டுள்ளது. வாக்காளர் அடையாள அட்டை 1995 இல் வாங்கப்பட்டதற்கு குறிப்பு உள்ளதா என்றால் இல்லை.

2. 1995 -ற்கு பிறகு வாக்காளர் அடையாள அட்டையில் குறிப்பிடப்பட்ட முகவரியில் வாக்களித்ததற்கான ஆதாரம் ஏதேனும் உள்ளதா என்றால் இருக்கிறது, ஆதார் அட்டை எப்போது வாங்கப்பட்டது என்பதற்கு ஆதாரம் இல்லை. Ex.P3 ஓட்டுநர் உரிமம் அசல் இன்று கொண்டு வரவில்லை. ஓட்டுநர் உரிமம் அசல் என்னிடம் இருக்கிறது. ஓட்டுநர் உரிமம் எனக்கு 2001 இல் கொடுத்தார்கள், 2001 இல் வழங்கப்பட்ட உரிமத்தை தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். நான்

குடியிருக்கும் முழு வழக்கு சொத்தின் விஸ்திரணம் எனக்கு தெரியாது, நான் குடியிருப்பது 1500 சதுரடி ஆகும். முழு சொத்தும் காரைக்காட்டு சொக்கலிங்கத்தெருவிற்கு தெற்கு, அம்பலத்தாடி மடத்திற்கு வடக்கு என்றால் சரிதான். வழக்கு சொத்தில் ஓட்டு கட்டிடம் இருக்கிறது. ஓட்டு கட்டிடம் அம்பலத்தாடி மட தெருவிற்கு பக்கத்தில் உள்ளது. ஓட்டு கட்டிடத்திற்கு பின்புரம் நான் இருக்கும் இடம் என்றால் சரிதான்.

3. ஓட்டு கட்டிடத்திற்கு பின்புரம் வடக்கில் எத்தனை கட்டிடம் என்றால் பின்புரம் கூரை வீடு மற்றும் shuttle court மட்டும் தான் உள்ளது. என் கூரை வீட்டையும் சேர்த்து 3 கூரை வீடுகள் உள்ளது. எனது கூரை வீடு மேல்புரத்தில் கடைசியில் உள்ளது என்றால் சரிதான். எனது வீட்டிற்கு கீழ்புரத்தில் 30 அடி காலி மனை உள்ளது. காலி மனைக்கு கீழ்புரத்தில் உத்திராபதியின் கூரை வீடு உள்ளது. உத்திராபதியின் கூரை வீட்டிற்கு கீழ்புரம் ராணி என்பவரின் வீடு உள்ளது. shuttle court எனது வீட்டிற்கு பின்புரம் உள்ளது. எனது கூரை வீட்டில் கீழ்மேல் 41, தென்வடல் 41 ஆகும். மின் இணைப்பு இல்லை, 2015-இல் இருந்து solar தான் வைத்திருக்கிறேன். solar 2015 இல் வைத்திருப்பதற்கான ஆதாரம் உள்ளது. ஏன் கூரை வீட்டிற்கு மின் இணைப்பு வாங்கவில்லை என்றால் தண்டபானிக்கும், ஆடியபாதத்திற்கும் பிரச்சனை இருந்ததால் மின் இணைப்பு பெறவில்லை.

4. உத்திராபதி வீட்டிற்கு மின் இணைப்பு இல்லை, ராணி வீட்டிற்கு மின் இணைப்பு உள்ளது. shuttle court ற்கு மின் இணைப்பு உள்ளது. வழக்கு சொத்தில் இருக்கும் வீட்டிற்கு 1995 இல் குடிவந்தேன். வழக்கு சொத்து யாருக்கு பாத்தியம் என்றால் ஆடியபாதத்திற்கு பாத்தியமாகும். ஆடியபாதம் இறந்துவிட்டார், எப்போது இறந்தார் என்று தெரியாது. அவர் இறந்து சுமார் 5 வருடம் இருக்கும். ஆடியபாதத்திற்கு வாரிசுகள் இருக்கிறார்கள், அவர்கள் தில்லை நடராஜன், மற்றவர்கள் பெயர் தெரியாது. ஆடியபாதத்திற்கு சொத்து பாத்தியம் என்பதற்கு ஆவணங்கள் நான் பார்த்திருக்கிறேனா என்றால் இல்லை. தண்டபானிக்கும், ஆடியபாதத்திற்கும் சொத்து பிரச்சனை உள்ளது, என்ன பிரச்சனை என்று தெரியாது. உத்திராபதி, ராணி எவ்வாறு அவ்விடத்திற்கு வந்தார்கள் என்று தெரியாது, நான் கேட்டு தெரிந்துக்கொள்ளவில்லை.

5. எனது குடும்பத்தில் நான், என் மனைவி, 2 மகன்கள் இருக்கிறோம். எனது மனைவி மற்றும் பிள்ளைகள் ஆதார் அட்டை, வாக்காளர் அடையாள அட்டை

உள்ளது ஆனால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. ஆடியப்பதத்திடம் வாடகைதாரரிடம் இருந்தேனா என்றால் என்னிடம் இடத்தில் இருந்துக்கொள்ளும்படி கூறினார், எப்போது கேட்கிறாரோ அப்போது பணம் கொடுத்துவிட்டு இருந்துக்கொள்ளும்படி கூறினார். இதுவரை ஆடியப்பாதத்திற்கு பணம் எதுவும் கொடுக்கவில்லை, என்னிடம் ஆடியபாதம் பணம் கேட்கவில்லை, நான் கேட்டதற்கு வேண்டாம் என்று கூறினார், அவர் கேட்டுகும்போது கொடுக்கும்படி சொன்னார். எப்போது கேட்டேன் என்றால் 1998 இல் பணம் கொடுக்கவா என்று ஆடியபாததத்திடம் கேட்டேன். 1995 இல் இருந்து இன்றுவரை ஆடியபாதத்திற்கும், அவரது குடும்பத்தாருக்கும் எந்த தொகையும் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

6. தற்போது கூட வழக்கு சொத்து யாருடையது என்று நான் தெரிந்துக்கொள்ளவில்லை என்றால் சரிதான். Ex.P4 KVB bank account எப்போது தொடங்கப்பட்டது என்று ஞாபகம் இல்லை. Ex.P4 -இல் 09.11.2017 இல் தொடங்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். Ex.P5 pass book எப்போது தொடங்கப்பட்டது என்றால் 1999 இல் இருக்கும். மனுதாரர் தரப்பு ஆவணங்கள் உண்மையானது இல்லை என்றால் சரியல்ல. வழக்கிற்காக பொய்யாக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. 1997 இல் Ex.P6 குடும்ப அட்டை வழங்கப்பட்டது. 1997 இல் குடும்ப அட்டை வழங்கப்பட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. Ex.P7 குடும்ப அட்டை 2011 அல்லது 2012 இல் கொடுக்கப்பட்டது. Ex.P8 Auto Insurance நடைமுறை ஆண்டு செய்யப்பட்டது. Auto என்னுடையது, ஆட்டோவை நான் தான் சொந்தமாக ஓட்டிவருகிறேன்.

7. Auto Insurance 2026-2027 ஆண்டிற்கானது. நான் பகுதி நேரமாக பேனர் தொழில் செய்து வருகிறேன். நான் குடியிருக்கும் வீட்டின் மதிப்பு தெரியவில்லை. Ex.P9 VAO சான்றிதழ் ஆகும், தரை யாருக்கு பாத்தியம் என்றால் தண்டபானிக்கு என்று சொல்லிவிட்டு மீண்டும் சாட்சி ஆடிய பாதத்திற்கு பாத்தியம் என்று கூறினார். VAO சான்றிதழ் நான் இருக்கும் இடத்தில் தான் வசிக்கிறேன் என்பதற்கு ஆதாரமாக வாங்கப்பட்டது. VAO விடம் நான் குடியிருக்கும் இடம் எனக்கு சொந்தமானது என்பதற்காக ஆதாரம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். VAO விடம் சொத்தின் மதிப்பு கேட்டு நான் மனு எதுவும் கொடுக்கவில்லை. டவுனில் வீட்டு வரி municipalty இல் வசூலிக்கிறார்கள் என்றா'ல் சரிதான்.

municipalty யிடம் எனது வீட்டிற்கு வரி விதிப்பு இல்லை என்பதற்கு சான்றிதழ் எதுவும் வாங்கவில்லை, Ex.P10 எனது auto விற்கு தான் காப்பீடு செய்திருக்கிறேன். கல்யாணசுந்தரியை தெரியாது. கல்யாணசுந்தரி வழக்கு சொத்தில் குடியிருந்தாரா என்றால் நான 1995 இல் வந்ததில் இருந்து அவரை பார்த்தது இல்லை.

**சாட்சி விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/-.S.Padmavathi,
Principal District Munsif
Chidambaram.